**செய்தி வெளியீடு எண்: 967** **நாள்: 31.12.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை–28</u>**

**2018** ஆம் ஆண்டு முதன்மைத் தேர்வில் (UPSC) வெற்றி பெற்ற தமிழ் நாட்டை சார்ந்த மாணவ/மாணவியர்கள் **19.01.2019** மற்றும் **20.01.2019** அ;ன்று நடைபெறும் மாதிரி நேர்முக தேர்வில் கலந்துகொள்வதற்கு மூன்று புகைப்படத்துடன், மத்திய தேர்வாணைக் குழு முதன்மைத் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப நகலுடன், தங்களது பெயரையும் மற்ற விவரங்களையும் அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம் ‘’காஞ்சி **163/1** பி.எஸ் குமாரசாமி ராஜா சாலை ,(கிரீன்வேஸ் ரோடு) சென்னை **600028** –ல் பதிவு செய்து விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி எண்கள் **044–24621909, 044–24621475** விண்ணப்பப் படிவம் பயிற்சி மைய இணையதளத்தில் www,civilservicecoaching,com பதிவிறக்கம் செய்து பூர்தி செய்து மேற்குறித்த அலுவலகத்தில் சமர்பிக்கலாம்.

ஆளுமைத் தேர்வுக்கு செல்லும் தகுதி பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு, இப்பயிற்சி மையத்தில், முத்த இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் பணி அலுவலர்களையும் கல்லூரிகளின் பேராசிரியர்களையும் கொண்டு, மாதிரி ஆளுமைத் தேர்வும்,, சிறப்பு வகுப்புகளும் நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்வும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன, ஆளுமைத்தேர்வுக்கு புதுடெல்லி செல்லும் மாணவ/மாணவியர்களுக்கு பயணப்படியாக ரூ. **2000/–**மும் பத்து நாட்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்கி ஆளுமைத் தேர்வில் கலந்து கொள்ள ஏற்பாடுகளும் இப்பயிற்சி மையத்தால் செய்யப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**